

கடம்பூர் கூட்டுறவு வங்கி துணை தலைவர் பரும்புக்கோட்டை பஞ்சாயத்து தலைவர் கண்டி சுப்புராஜ் அவர்களது இல்ல திருமணவிழாவில் தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் பி.கீதாஜீவன் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் கோவில்பட்டி சட்டமன்ற உறுப்பினர் கா.கருணாநிதி, கடம்பூர் ஜமீன்தார் எஸ்.வி.எஸ்.பி.மாணிக்கராஜா மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### இள.புகழேந்தி தலைமை! கலாநிதி வீராசாமி, ப.பரிதிஇளம்சுருதி முன்னிலை!

# கடலூர் கிழக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. சிறப்புரை!

கடலூர், செப்.14 -

கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம், 12092026 சனிக்கிழமை, மாலை 5 மணியளவில், காட்டுமன்னார்கோயில், எம்.ஆர்.கே கலையரங்கத்தில், தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி தலைமையில் நடைப்பெற்றது. மாவட்ட கழக துணை செயலாளர் அ.ஞானமுத்து வரவேற்புரையாற்றினார்.

கடலூர் கிழக்கு மாவட்டக் கழக செயலாளர்,சட்டமன்ற உறுப்பினர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கழக அயலக அணி தலைவர் கலாநிதி வீராசாமி, துணை செயலாளர் ப.பரதி இளம்சுருதி ஆகியோர் சிறப்புரையாற்றினார்.

முன்னாள் எம்.எல்.ஏக்கள் மருதூர் இராமலிங்கம், கோ.ஐயப்பன், துரை.கி.சரவணன்,மாவட்ட கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன் மாவட்ட கழக துணை செயலாளர்கள்: ஆர்.சக்திவேல், சுதா சம்பத் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் கீழ்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

கழக தலைவர் மக்கள் முதல்வர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞரணி செயலாளர் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி கழக மறு சீரமைப்பு பணிகளை விரைவாக, முறையாக மாவட்ட கழகம் முழுமையும் ஒன்றிய நகர பகுதி பேரூர் கிளைக் கழகங்கள் உட்பட நமது மாவட்ட செயலாளர் மாண்பு நிலை எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களின் ஆலோசனை அறிவுரை பெற்று செய்வது என தீர்மானிக் கப்பட்டது. அனைவரும் முழு ஒத்துழைப்புடன் இப்பணி செயலாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப் பட்டது.

எதிர்க்கட்சித் தலைவர், இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீரழிந்து மக்கள் பணிகள் பாதிக்கப் பட்டிருப்பது குறித்து எழுப்பிய கேள்விகளுக்கு முறையாக பதில் அளிக்காமல் மூடத்தனமான இருக்கின்ற மூடத்தனம் முதல்வரின் அவதூறு பேச்சுக்களையும், மக்கள் விரோத தற்குறி தவெக அரசையும் இந்த கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.

செப்டம்பர் 15 அறிஞர் அண்ணா பிறந்தநாள், செப்டம்பர் 17 தந்தை பெரியார் பிறந்த நாள், செப்டம்பர் 17 நம் திராவிட முன்னேற்றக் கழகம் உதயமான நாள் என்று திராவிட வரலாற்று நிகழ்வுகளை மிகச் சிறப்பாக மாவட்ட முழுவதும் முப்பெரும் விழாவாக கொண்டாடுவது என்றும் விழாவில் மக்கள் நலப் பணிகள் செய்ய வேண்டும் எனவும் இந்த கூட்டம் அனைத்து அமைப்புகளையும் கழகத்தின் பல்வேறு அணிகளையும் கேட்டுக்கொள்கிறது விழாக்கள் விபரங்களை மாவட்ட கழகத்திற்கு தெரிவித்திட வேண்டும் என்றும் தீர்மானிக்கப் பட்டது.

என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறை வேற்றப் பட்டன.

இந்நிகழ்வில்;

ஒன்றிய கழக செயலாளர்கள்: அ.முத்துசாமி,வி.சிவக்குமார்,தங்க.ஆனந்தன், த.ஜெயபாண்டியன், கே.ஆர்.ராயர்,

ஆர்.நாராயணசாமி,கே.ஆர்.கே.கோவிந்தராஜ், எஸ்.செந்தில்குமார், முத்து.பெருமாள், தெ.காசிராஜன், பி.சுப்பிரமணியன், பா.திருமாவளவன், கே.ஆர்.தனஞ்செயன், ஆர்.விஜயசுந்தரம், , ஏ.எஸ்.மதியழகன்,பி.சுந்தர பாண்டியன்,

ஏ.எம்.மதியழகன்,

மு.வெற்றிவேல், வி.ஜி.பி.சபாநாயகம், டி.திருமூர்த்தி, வி.பி.பாலு, ஆர்.கலையரசன், எம்.மனோகரன், த.சங்கர், ஆர்.ராஜேந்திரன், கே.நடராஜன்,

ம.சோழன், வி.கோவிந்தசாமி, கே.மகேஷ், கடலூர் மாநகர செயலாளர்: கே.எஸ்.ராஜா,கடலூர் பகுதி செயலாளர்கள்: மு.இளையராஜா, நகர கழக செயலாளர் த.தமிழ்ச்செல்வன், வடலூர் நகரமன்றத் தலைவர் எஸ்.சிவக்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள்: வி.ஞானசேகரன், வெ.விக்கரமன், பொதுக்குழு உறுப்பினர்கள்: கே.பி.ஆர்.பாலமுருகன், என்.டி.கணேசன், பா.கோதண்டபாணி, மஞ்சு ஆசிரியர் பி.வெங்கடாஜலபதி,ஆசிரியர் சின்னமணி,தருமர்.பழனிசாமி,

பேரூர் செயலாளர்கள்: எஸ்.கணேசமூர்த்தி, கு.வே.ப.ஜெய்சங்கர், க.பழனி, ப.மனோகரன், கே.ஜெயச்சந்திரன், கே.சுரேஷ், தேன்மொழி சங்கர், சார்பு அணி நிர்வாகிகள் தொண்டரணி ஆராமுது, விவசாய அணி பொன்.பன்னீர்செல்வம், தொமுச பழனிவேல்,

மகளிர் அணி த.அமுதராணி,மகளிர் தொண்டரணி ப.மனோரஞ்சிதம், பொறியாளர் அணி அப்பு. சந்திரசேகர், வழக்கறிஞர் அணி பி.அருள்ஜோதி, நெசவாளர் அணி ப.நல்லதம்பி, ஆதிதிஆரவிடர் நலக்குழு ஆர்.பரந்தாமன்,

சிறுபான்மை நலபிரிவு எம்.எஸ்.முகமது யூனஸ், வர்த்தகர் அணி ஆர்.ரெங்கநாதன்,

தகவல் தொழில்நுட்ப அணி ஏ.ஜாபர் அலி, விளையாட்டு மேம்பாட்டு அணி பூ.சதீஷ்குமார், மீனவர் அணி வீ.செல்வபாரதி, அயலக அணி விசுவராஜ், அமைப்பு சாரா ஓட்டுநர் அணி தாணூர் சிவக்கொழுந்து உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### செப்.15 பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா!

# புதுக்கோட்டையில் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

## வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் வேண்டுகோள்!

புதுக்கோட்டை, செப். 14 -

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

காஞ்சி தந்த காவியத் தலைவர் உலகத் தமிழர் உள்ளங்களில் எல்லாம் சிம்மாசனம் போட்டுக் கொலுவீற்றிருக்கும் செந்தமிழ் அறி ஞர் தமிழ் மொழி உயர்வுக்காகவும் . தமிழர்களின் மேம்பாட்டுக்காகவும் , தமிழ் நாட்டின் சிறப்புக்காகவும் வாழ்நாள் எல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர் கடமை , கண்ணியம் , கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர் “இப்படை தோற்கின் எப்படை வெல்லும்” என்று தம்பிமார் பெரும்படையைக் கண்டு , நெஞ்சுயர்த்தி பெருமிதம் கொண்ட பெருமகன் “மெட்ராஸ் ஸ்டேட்” என்ற பெயரை “தமிழ் நாடு” என்று பெயர் மாற்றம் செய்து தாய்க்குப் பெயர் தந்த தனிப் பெரும் தனயன் சுய மரியாதை சுடரொளி சொக்க வைக்கும் சொற்பொழிவாளர் எழுத்து வேந்தர் தென்னகத்தின் மிகப் பெரும் அரசியல் தலைவர் பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் 118 வது ஆண்டு பிறந்த நாளான 15.9.2026 செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் புதுக்கோட்டை மாவட்ட தி.மு.க அலுவலகத்திலிருந்து ஊர்வலமாக புறப்பட்டு சென்று அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது. அது சமயம் புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு. பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றியப் பெருந்தலைவர்கள், துணைப் பெருந்தலைவர்கள், ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள்,



உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாது தமது அறிக்கையில் கூறி உள்ளார்.

### தென்காசி மரு.கலை கதிரவன் எம்.எல்.ஏ. தலைமை ! முன்னாள் மாவட்ட செயலாளர் பொ.சிவபத்மநாதன் முன்னிலை!

# தென்காசி மாவட்டம் ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம் காவலாக்குறிச்சி ஊராட்சியில் புதிய கலையரங்கம்!

## ஒன்றிய குழு தலைவர் திவ்யா மணிகண்டன் துவக்கி வைத்தார்!

தென்காசி, செப்.14 -

தென்காசி மாவட்டம் ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட வடக்கு காவலாக்குறிச்சியில் ஆலங்குளம் ஊராட்சி ஒன்றிய பொது நிதியி லிருந்து கட்டப்பட்ட கலையரங்கம் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு. கலை கதிரவன் தலைமையில்,தென்காசி தெற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் பொ.சிவ பத்மநாதன்,ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினர் முத்துமாரி ரமேஷ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. நிகழ்வில் ஆலங்குளம் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் திவ்யா மணிகண்டன் பங்கேற்று கலையரங்கத்தை துவக்கி வைத்தார்.

ஊராட்சி மன்ற தலைவர் பாலசுப்பிரமணியன் வரவேற்றார். நிகழ்ச்சியை கழக வழக்கறிஞர் சபரி கார்த்திக் தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்வில் சட்டமன்றத்தில் இரட்டைக் குளம் கால்வாய் சம்பந்தமாக பேசியதற்கு மரு.கலை கதிரவன் எம்.எல்.ஏ.வை பொதுமக்கள்,ஊர் நிர்வாகிகள் தங்களது பாராட்டுகளை தெரிவித்தனர்.

நிகழ்வில் முத்தம்மா ள்புரம் ஊராட்சி மன்ற தலைவர் ஆர்.பி.முருகன் கல்லூரணி ஊராட்சி மன்ற தலைவர் ராஜ்குமார், மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் முத்துக்குமார்,மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ஐயம்பெருமாள்,மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கணபதி,முன்னாள் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ரவிச்சந்திரன்,கிளை செயலாளர் அய்யாசாமி, ஜெயக்குமார், காவலாகுறிச்சி அந்தோணி, மாவட்ட விவசாய சங்க தலைவர் மாடசாமி,ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் அசோக், ஹரி கிருஷ்ணன், கழக வழக்கறிஞர் ஹரி கிருஷ்ணன் முன்னாள் கடங்கநேரி ஊராட்சி மன்ற தலைவர் லட்சுமணன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

முன்னதாக ஊர் எல்லையில் இருந்து மரு.கலை கதிரவன் எம்.எல்.ஏ.வை வாண வேடிக்கை முழங்க மேளதாளத்துடன் நிர்வாகிகளை பொதுமக்கள் அழைத்துச் சென்றனர். கலையரங்கம் அமைத்துக் கொடுத்ததற்கு பாராட்டையும் தெரிவித்தனர்.

தொடர்ந்து பொது மக்கள் தினமும் பல மணி நேரம் மின்சாரம் இல்லாமல் போகிறது என்கிற குற்றச்சாட்டை தெரிவித்தனர்.

மேலும் சட்டமன்றத்தில் இரட்டை குளம் கால்வாய் சம்பந்தமாக பேசிய சட்டமன்ற உறுப்பினர் மரு.கலை கதிரவன் எம்.எல்.ஏ.வை பொதுமக்களும், ஊர் நிர்வாகிகளும் தங்களின் பாராட்டுகளையும் தெரிவித்தனர்.

### கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில்

# சிவகங்கையில் முதல்வர் விஜய்யைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## ஏராளமான கழகத்தினர் – பொதுமக்கள் கண்டன முழக்கம்!

சிவகங்கை, செப், 14 -

முதல்வர் விஜய்யை கடித்து சிவகங்கையில் கண்டன ஆர்ப்பாட்டம். கே.ஆர்.பெரிய கருப்பன் தலைமையில் நடைபெற்றது. ஆயிரத்திற்கும் மேற்பட்ட கழகத்தினர் பங்கேற்பு. மு.தென்னவன் திருமதி தமிழரசி முன்னிலை வகித்தனர்.

தமிழக சட்டமன்றத்தில் முதல்வர் விஜய் மிசா அவசரநிலை குறித்து தவறாக பேசியதை கண்டித்து மாவட்ட தலைநகரங்களில் நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது . கழகத் தலைவர் தளபதி அவர்கள் உத்திரவின் பேரில் நேற்று சிவகங்கை மாவட்ட கழகத்தின் சார்பில் சிவகங்கை சண்முகராஜா கலையரங்கில் மாவட்ட கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் தலைமையில் முன்னாள் அமைச்சர் கள் மு.தென்னவன், திருமதி தமிழரசி ரவிக்குமார் ஆகியோர் முன்னிலையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் எம்.எல்.ஏக்கள் சுப. மதியரசன், எஸ். மாரியப்பன் கென்னடி , மாவட்ட அவை தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன், மாவட்ட கழக துணைச் செயலாளர்த.சேங்கைமாறன், புலவர் சே.செவந்தியப்பன்,, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நாகனி செந்தில் குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் ஜெ.மதார்சேட், பி.டி.ஆர்.முத்து, நகர் கழக செயலாளர் கள் சி.எம்.துரை.ஆனந்த்.,க.பொன்னுச்சாமி பெரி.பாலா, காரைக்குடி மாநகர செயலாளர் துணை மேயர் நா.குணசேகரன், கழக அமைப்பு இணைச் செயலாளர் தமிழ் ப்ரியா , மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர்எஸ். எஸ்.ஏ.வல்லபாய், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார்,அயலக அணி சன் சீமான் சுப்பையா , தகவல் தொழில்நுட்ப அணி காளிமுத்து,மாவட்ட கழக செய்தி தொடர்பாளர் அ. அயூப்கான்,

மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் கொத்தமங்கலம் சேது, அமைப்பாளர் சிங்கமுத்து ,ஒன்றிய கழகச் செயலாளர்கள் எம் ஜெயராமன் திருமலை முத்துராம லிங்கம் பெ.மந்த காளை, துரைராஜாமணி, எம் .அண்ணாதுரை, அ.முத்துசாமி, ஆறு. செல்வராஜன் ,, வே. தமிழ்மாறன் , கா வெங்கட்ராமன் ஆர்.எம். கென்னடி ,யோக. கிருஷ்ணகுமார், வே.ஆரோக்கியசாமி நாகனிரவி , வே. பூபால சிங்கம் ,லெ.மு.ரவிச்சந்திரன், எஸ்.சன்முகவடிவேல், விராமதி மாணிக்கம் கே. பாலசுப்ரமணியன் பூமணி, நா.நெடுஞ்செழியன், குன்னக்குடி சுப்பிர மணியன், பி.செல்வ ராசன், எம்.ஏ.கடம்ப சாமி, திருமதி வசந்தி சேங்கைமாறன்,பேரூர் கழக செயலாளர் கள் கதிர்வேல் ,நாகூர் கனி, ஜெயராமன், அசோக், பிரம்மையா, பி .ஏ. நஜ்முதீன், கல்லல் கே ஆர். அசோகன், முன்னாள் ஒன்றிய குழு தலைவர் திருமதி லதா அண்ணாதுரை,

மகளிரணி நிர்வாகிகள் மார்க் ரெட்கமலா , திலகவதி கண்ணன், பாக்யலட்சுமிவிஜய குமார் , மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் ஹேமலதா செந்தில், செல்வராணி ஐயப்பன், லட்சுமி கணேஷ், மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் ராமகிருஷ்ணன் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஆர். சேதுபதி ராஜா, கார்த்தி, எஸ்.எம்.மதிவாணன் பரணிகிட்டு, கே.எம். பொற்கோ, மாவட்ட வழக்கறிஞரணி அமைப்பாளர் எஸ்.பாஸ்கரன், நிர்வாகிகள் ராஜா அமுதன்,ஆதி. அழகர்சாமி, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் ஜாகிர் உசேன், கண்ணன் ,புலிக்குட்டி ,மதார், மீனவரணி அண்ணாமலை, நகர் மன்ற துணைத் தலைவர் பாலா சுந்தர், வே. கருணாகரன், விவசாய அணி காளிமுத்து, அன்புச் செழியன், பொருளாளர் ஏ.எம்.கண்ணன், ஜெயகாந்தன், ராமதாஸ் , சுப. தமிழரசன், தலைமை கழக பேச்சாளர் அய்யாசாமி, ஓட்டுனர் ரமேஷ், அச்சங்குளம் முருகன், ஒன்றிய துணைச் செயலாளர் எஸ்.முத்துகுமார் உட்பட மாவட்ட முழுவதும் விருந்து ஒன்றிய , நகர்,பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். முன்னதாக மாவட்ட கழக துணை செயலாளர் த.சேங்கை மாறன் வரவேற்று பேசினார். சிவகங்கை நகர் கழக செயலாளர் சி.எம்.துரை.ஆனந்த் நன்றி கூறினார். சுட்டெரிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாமல் மாவட்டத்தில் இருந்து ஆயிரத்து மேற்பட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் கே. ஆர்.பெரிய கருப்பன் முதல்வர் விஜயை கண்டித்து கண்டன முழக்கங்கள் கூற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டஅனைவரும் திரும்ப கூறினார்கள்.

### நாளை பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா

# சிவகங்கை மாவட்டத்தில் சிறப்பாகக் கொண்டாட வேண்டும்!

## முன்னாள் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வேண்டுகோள்!

சிவகங்கை, செப். 14 -

நாளை 15ஆம் தேதி பேரறிஞர் பெருந்தகை அண்ணாவின் பிறந்த நாளை சிவகங்கை மாவட்டத்தில் சிறப்பாக கொண்டாடுமாறு மாவட்ட கழக செயலாளர் கேஆர். பெரிய கருப்பன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து கே.ஆர். பெரிய கருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது. தமிழகத்தில் திராவிட முன்னேற்ற கழகத்தை உருவாக்கி தமிழ் இனத்திற்காகவும், தமிழ் மொழிக்காகவும், தமிழர்களின் முன்னேற்றத்திற்காக, அயராது பாடுபட்டவர் பேரறிஞர்.அண்ணா அவர்கள் ஆவார். இன்று நம்மிடையே பேரறிஞர் அண்ணா அவர்கள் இல்லாவிட்டாலும் அவருடைய நினைவினை போற்றும் வகையில் பேரறிஞர் அண்ணா கண்ட கனவினை, லட்சியங்களை, கொள்கைகளை கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற தாரக மந்திரத்தை



கழகத் தலைவர் முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்கள் அண்ணாவின் வழியில் ஐந்து முறை முதல்வராக இருந்து நல்லாட்சி நடத்தினார்.பேரறிஞர் அண்ணா அவர்கள் நினைத்த நல்ல செயல்களை தனது வாழ்நாள் இறுதி வரை செயல்படுத்தினார். தமிழகத்தில் தலைவர் கலைஞர் ஆட்சியில் பல்வேறு மக்கள் நலத் திட்டங்கள் கொண்டு வந்து செயல்படுத்தப்பட் டது.

அண்ணாவின் கனவை நனைவாக்கியவர் தலைவர் கலைஞர் .அவர் வழியில் கடந்த ஐந்தாண்டு கால திராவிட மாடல் ஆட்சியின் தலைவர் ,முன்னாள் முதல்வர் ,தளபதி அவர்கள் , தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா தலைவர் கலைஞர் ஆகியோர் காட்டிய வழியில் தமிழகத்தை சிறப்பாக ஆட்சி செய்து தனது பொற்கால ஆட்சியினை இந்திய நாடு மட்டுமின்றி உலகம் முழுவதும் உள்ள மக்களை தமிழகத்தின் பக்கம் திரும்பி பார்க்க வைத்தவர் நமது தளபதி அவர்கள் ஆவார். .அத்தகைய திராவிட இயக்கத்திற்கு வித்திட்ட பேரறிஞர் அண்ணா அவரது பிறந்தநாள் விழா நாளை 15ம்தேதி தமிழகம் முழுவதும் சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது.

நமது சிவகங்கை மாவட்டத்தில் சிவகங்கை, மானாமதுரை, காரைக்குடி, திருப்பத்தூர், சிங்கம்புணரி ,ஆகிய ஊர்களில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலைகளுக்கு மாலை அணிவித்தும்,அது தவிர ஒன்றிய ,நகர ,பேரூர் ,கழகங்களில் பேரறிஞர் அண்ணாவின் திருவுருவப் படத்தை மலர் மாலைகளால் அலங்கரித்து மரியாதை செலுத்துமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன் .இந்த நிகழ்ச்சியில் அந்தந்த பகுதி மாவட்டக் கழக நிர்வாகிகள், செயற் குழு பொதுக் குழு, உறுப்பினர் கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்,

கடந்த ஐந்து ஆண்டு கால கழகத் தலைவர் முன்னாள் முதல்வர் தளபதி அவர்கள் ஆட்சியின் சாதனையை மக்களுக்கு எடுத்து கூறும் வகையில் கழக் கொடியினை ஏற்றி இனிப்புகளை வழங்கி பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாள் நிகழ்ச்சியினை சிறப்பான முறையில் கொண்டாட வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கிறேன்.

இவ்வாறு கே.ஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கை யில் கூறியுள்ளார்.

### செப்.15 பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா!

# புதுக்கோட்டை தெற்கில் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

## மாவட்ட கழகத்தினருக்கு அமைச்சர் எஸ்.ரகுபதி வேண்டுகோள்!

புதுக்கோட்டை, செப். 14 -

புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான எஸ்.ரகுபதி எம்.எல்.ஏ வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

காஞ்சி தந்த காவியத் தலைவர் உலகத் தமிழர் உள்ளங்களில் எல்லாம் சிம்மாசனம் போட்டுக் கொலுவீற்றிருக்கும் செந்தமிழ் அறிஞர் தமிழ் மொழி உயர்வுக்காகவும் . தமிழர்களின் மேம்பாட்டுக்காகவும் ,

தமிழ் நாட்டின் சிறப்புக்காகவும் வாழ்நாள் எல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர் கடமை , கண்ணியம் , கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர் “ இப்படை தோற்கின் எப்படை வெல்லும் “ என்று தம்பிமார் பெரும்படையைக் கண்டு , நெஞ்சுயர்த்தி பெருமிதம் கொண்ட பெருமகன் “ மெட்ராஸ் ஸ்டேட் “ என்ற பெயரை “ தமிழ் நாடு ” என்று பெயர் மாற்றம் செய்து தாய்க்குப் பெயர் தந்த தனிப் பெரும் தனயன் சுய மரியாதை



சுடரொளி சொக்க வைக்கும் சொற்பொழிவாளர் எழுத்து வேந்தர் தென்னகத்தின் மிகப் பெரும் அரசியல் தலைவர் பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் 118 வது பிறந்த நாளான 15.9.2026 செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் எனது (முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி எம்.எல்.ஏ) தலைமையிலும், முன்னாள் அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் எம்.எல்.ஏ, முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர் உதயம் சண்முகம் ஆகியோர் முன்னிலையிலும் அறந்தாங்கி பேருந்து நிலையத்திலிருந்து ஊர்வலமாக புறப்பட்டு சென்று அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது. அது சமயம்

புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு. பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்,

ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாது தமது அறிக்கையில் கூறி உள்ளார். இந்நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் அறந்தாங்கி நகர தி.மு.க செயலாளர் க.ராஜேந்திரன் செய்து வருகிறார்.